ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2297/78 - 2022 සැප්තැම්බර් මස 16 වැනි සිකුරාදා - 2022.09.16
2297/78 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு**

**அறிவித்தல்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 44 ஆவது உறுப்புரையின் (1)(அ) உப உறுப்புரையின் கீழ், எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகித்து, என்னால், 2022 யூலை மாதம் 22 ஆந் திகதிய 2289/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலானது, 2022 செத்தெம்பர் மாதம் 16 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு திருத்தப்படுகின்றதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**ரணில் விக்கிரமசிங்க,**
சனாதிபதி.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2022, செத்தெம்பர் 16.

1A - G 37509 — 366 (2022/09)
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

*அட்டவணை*

*(1)* அவ்வறிவித்தலில் "இல. 02. நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர்" எனும் தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:

(அ) அதன் I ஆம் நிரலில் இல. 32 ஆம் விடயத்தை நீக்குவதன் மூலம்;

(ஆ) அதன் II ஆம் நிரலில் இல. 26, 50 மற்றும் 51 ஆகிய விடயங்களை நீக்குவதன் மூலம்;

(இ) அதன் III ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள பின்வரும் விடயத்தை நீக்குவதன் மூலம்;

- (1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க) இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம்
- (1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க) பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழுச் சட்டம் (இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டம்)
- (2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க) கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக் குழுச் சட்டம்

*(2)* அவ்வறிவித்தலில் "இல. 06. முதலீட்டு மேம்பாடு அமைச்சர்" எனும் தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:

(அ) அதன் I ஆம் நிரலில் இல. 10 ஆவது விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன் மூலம்;

11. தேசிய நன்மை மற்றும் பொருளாதார முன்னேற்றத்தை நோக்காகக் கொண்டு விசேட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் ஏனைய வசதிகளுடன் கூடிய சர்வதேச தொழில் முயற்சிகள் மற்றும் சேவைகள் வழங்குவதற்கான கேந்திர நிலையமாக கொழும்பு துறைமுக நகர் விசேட பொருளாதார வலயத்தை அபிவிருத்தி செய்தல்

(ஆ) அதன் I ஆம் நிரலில் இல. 11 மற்றும் 12 ஆகிய விடயங்களை முறையே 12 மற்றும் 13 என மீண்டும் இலக்கமிடுவதன் மூலம்;

(இ) அதன் II ஆம் நிரலில் இல. 4 ஆவது விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன் மூலம்;

5. இலங்கை அபிவிருத்தி ஏற்றுமதிச் சபை
6. இலங்கை முதலீட்டுச் சபை
7. கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு

(ஈ) அதன் III ஆம் நிரலில் "(1988 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க) உள்நாட்டவர் அல்லாதோருக்குப் பிரஜாவுரிமை வழங்கும் (விசேட ஏற்பாட்டுச்) சட்டம்" என்பதற்குப் பின்னர் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன் மூலம்;

- (1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க) இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம்
- (1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க) பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழுச் சட்டம் (இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டம்)
- (2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க) கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக் குழுச் சட்டம்

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.